**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**தேதி: 29.01.2026**

**OS. No. 36/2016**

**வழக்கு சாட்சி DW.1– மோகினி, க/பெ.பிரகாஷ்**

<u>**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**</u>

27.02.2013 அன்று வாதியை அணுகி வழக்குசொத்திற்கு கிரையத்தொகை ரூ.4,90000 என பேசி முடித்து அன்றைய தேதியிலேயே ரூ.50,000/– ஐ வாதிக்கு கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்சொன்ன தேதியிலிருந்து 1 மாத காலஅவகாசகத்திற்குள் கிரைய மீதித்தொகை கொடுத்து வழக்கு சொத்தை வாதி எனக்கு எழுதிக்கொடுக்க வேண்டியது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல , சொத்து தொடர்பாக நீதிமன்றத்தில் மாணிக்கம் என்பவர் வழக்கு தொடுத்திருப்பதாகவும் அதை முடித்துவிட்டு கிரையம் தருவதாக சொன்னார். வாதியினுடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தில் மாணிக்கத்தின் வழக்கு விபரம் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. மேற்சொன்ன சரத்துக்களை கொண்ட ஆவணத்தை எனது தரப்பு ஆவணமாக வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் . கிரைய ஒப்பந்த அடிப்படையில் ரூ .4,90,000/–ல் மீத கிரையத் தொகையை செலுத்தி கிரையம் செய்து கொள்ளாததால் மேற்சொன்ன ஒப்பந்தம் இரத்தாகிவிட்டது என்றால் சரியல்ல.

கிரைய ஒப்பந்தம் இரத்தாகிவிட்ட காரணத்தால் வாதி பெற்ற ரூ.50,000/– ஐ எனக்கு திரும்ப செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. முன்பணம் செலுத்தபோக மீதத்தொகையை செலுத்த தயாராக உள்ளேன் என்று உடன்படிக்கை ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள 1 மாத காலகெடுவிற்கு பின் பணம் செலுத்த தயாராக உள்ளேன் என்று நானோ , எனது வழக்கறிஞரோ

வாதிக்கு அறிவிப்பு அனுப்பினோமா என்றால் அனுப்பியுள்ளேன் . அவ்வாறு அனுப்பிய அறிவிப்பினை ஆவணமாக இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன் . வாதிக்கும், எனக்கும் பதிவு செய்யப்பட்ட உடன்படிக்கைகள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் பட்டா எண் விபரம் தெரியும். தாவா சொத்தின் சர்வே எண்.424/14 மற்றும் பட்டா எண்.1912 ஆகும். தாவா சொத்தை இந்த வழக்கின் 3ம் பிரதிவாதி சையது அபுதாகீர்தான் ஈடு கடனாக பதிந்து கொடுத்தார் என்றால் சரிதான் . தாவா சொத்தின் மேல் சையது அபுதாகீருக்கு பெயரில் பட்டாவோ , அவருக்கு அனுபவமோ, உரிமையோ இல்லை என்றால் சரியல்ல , சையது அபுதாகீர் தாவா சொத்தில் டீக்கடை நடத்திவந்த அவர்தான் சொத்தை எங்களுக்கு கொடுத்தார் . தாவா சொத்தின் பட்டா தற்போதுவரை வாதி வேலுச்சாமி பெயரில்தான் உள்ளது என்றால் சரியல்ல, தாவா சொத்தில் அனுபவமும் வேலுச்சாமியிடம்தான் உள்ளது என்றால் சரியல்ல . தாவா சொத்தில் எனது அனுபவத்தில் உள்ளது என்று காட்டக்கூடிய ஆவணங்கள் எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா சொத்து தற்போது வாதியின் அனுபவத்தில் காலியிடமாக உள்ளது என்றால் சரிதான் , ஆனால் வழக்கறிஞர் மணிகண்டன் என்பவரும் , வேலுச்சாமி என்பவரும் வீட்டை இடித்துவிட்டு சென்றுவிட்டார்கள். வழக்கறிஞர் மணிகண்டனை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன் . அவரை என்னால் அடையாளம் காட்டமுடியுமா என்றால் காட்டமுடியும் . நான் சொல்லும் வழக்கறிஞர் மணிகண்டன் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் தாவா சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் வாதிக்கு எதிராகவும் மணிகண்டன் என்பவருக்கு எதிராகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும், எனது கணவரும் வாதியை வழக்கு சொத்து தொடர்பாக மிரட்டுவதாக கொடைக்கானல் காவல்நிலையத்தில் வாதி புகார் கொடுத்து அதன்பேரில் குற்ற எண் .131/2016,

பிரிவுகள் 294(b), 323, 506(2) இ.த.ச.வின் கீழ் வழக்கு பதியப்பட்டது என்றால் அதுகுறித்த விபரம் எனக்கு தெரியாது . எனக்கும், 3ம் பிரதிவாதிக்கும் தாவா சொத்தில் எந்தவித உரிமையும், அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல . தாவா சொத்து பல இலட்சம் மதிப்புள்ள சொத்தை குறைத்த விலைக்கு கிரைய உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டு அபகரிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் வாதிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.01.29 18:54:52 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.